Singapore Examinations and Assessment Board

## Singapore–Cambridge General Certificate of Education Normal (Technical) Level (2023)

# Basic Tamil
# அடிப்படைத் தமிழ்
# (Syllabus 1204)

© MOE 2023

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| மதிப்பீட்டு நோக்கங்கள் | **3** |
| தேர்வு அமைப்புமுறை | **4** |
| தேர்வு விவர அட்டவணை | **6** |
| வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் | **7** |

## மதிப்பீட்டு நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஏற்கெனவே மாணவர் அடைந்துள்ள அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

**கேட்டல்**

- எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

**பேசுதல்**

- தமிழில் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்

**படித்தல்**

- பலவகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து சரியான உச்சரிப்புடன் வாய்விட்டுப் படித்தல்

- பலவகையான பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

**பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- கொடுக்கப்படும் தலைப்பையொட்டி ஈடுபாட்டுடன் உரையாடுவதோடு தம் கருத்துகளையும் மனவுணர்வுகளையும் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்

**எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- கொடுக்கப்படும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு குறுந்தகவல், வாழ்த்து அட்டை, அழைப்பிதழ், மின்னஞ்சல் போன்ற அமைப்பில் சிறுகுறிப்பு எழுதுதல் வேண்டும்.

## தேர்வு அமைப்புமுறை

அடிப்படைத் தமிழ்த் தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**வினாத்தாள் 1: மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்**
**(50 நிமிடங்கள், 30 மதிப்பெண்கள், 30%)**

இத்தாள் 'அ', 'ஆ' என்னும் இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

**'அ' பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் இரண்டு உரைநடைப் பகுதிகளையொட்டி ஐந்து தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**'ஆ' பிரிவு (கருத்து விளக்கப்படக் கருத்தறிதலும் வாசிப்புக் கருத்தறிதலும்)**

இப்பிரிவில் 3 பகுதிகள் இடம்பெறும்.

பகுதி 1
இப்பகுதியில் ஒரு கருத்து விளக்கப்படக் கருத்தறிதலையொட்டி (எ.டு. செய்தி, விளம்பரம்) இரண்டு தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

பகுதி 2
இப்பகுதியில் ஒரு வாசிப்புக் கருத்தறிதல் பனுவலையொட்டி (எ.டு. நடப்பு விவகாரம்) மூன்று தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

பகுதி 3
இப்பகுதியில் விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு கருத்து விளக்கப்படக் கருத்தறிதலையொட்டி ஐந்து வினாக்கள் கேட்கப்படும். அவ்வினாக்கள் மூவகையாக அமையும்.

முதல் வகை : இரண்டு தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

இரண்டாம் வகை : ஒரு சுயவிடை வினாவிற்கு விடை எழுதுதல் வேண்டும்.

மூன்றாம் வகை : கொடுக்கப்படும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு குறுந்தகவல், வாழ்த்து அட்டை, அழைப்பிதழ், மின்னஞ்சல் போன்ற அமைப்பில் சிறுகுறிப்பு எழுதுதல் வேண்டும்.

**வினாத்தாள் 2: வாய்மொழி**
**(10 - 15 நிமிடங்கள், 50 மதிப்பெண்கள், 50%)**

வாய்மொழித் தேர்வு பின்வரும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியது:
1 வாய்விட்டு வாசித்தல்
2 ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்

**1 வாய்விட்டு வாசித்தல்**

கணினித்திரையில் இடம்பெறும் ஓர் உரைநடைப் பகுதியை மாணவர் வாய்விட்டு வாசிக்கவேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசைநயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**2 ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**

மாணவர் கொடுக்கப்படும் ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்கவேண்டும். அந்த ஒளிக்காட்சி 55-60 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும். தேர்வுக்கு அமர்பவர் தேர்வாளர்களுடன் ஒளிக்காட்சியொட்டிய உரையாடலில் ஈடுபடவேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலில் சரளம், மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**வினாத்தாள் 3: கேட்டல் கருத்தறிதல்**
**(ஏறத்தாழ 30 நிமிடங்கள், 20 மதிப்பெண்கள், 20%)**

செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு முதலான தலைப்புகளில் நான்கு குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரே தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெற வேண்டும் என்ற அவசியமில்லை.

## தேர்வு விவர அட்டவணை

**சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்**
**வழக்க நிலை (தொழில்நுட்பம்)**
**அடிப்படைத் தமிழ் (1204)**

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் (மதிப்பளவு) |
|---|---|---|---|---|
| **1** (50 நிமிடங்கள்) | **மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்** | | | **30 (30%)** |
| | **‘அ’ பிரிவு: மொழிப் பயன்பாடு** | | | |
| | • முன்னுணர்வுக் கருத்தறிதல் - 2 பனுவல்கள் | தெரிவுவிடை வினாக்கள் | 5 | 10 (10%) |
| | **‘ஆ’ பிரிவு: கருத்தறிதல்** | | | |
| | • கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 2 | 4 (4%) |
| | • வாசிப்புக் கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 3 | 6 (6%) |
| | • விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்ட கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 2 | 4 (4%) |
| | | சுயவிடை வினாக்கள் | 2 | 6 (6%) |
| **2** (10 – 15 நிமிடங்கள்) | **வாய்மொழி** | | | **50 (50%)** |
| | 1 வாய்விட்டு வாசித்தல் | சுயவிடை | 1 | 20 (10%) |
| | 2 ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் | | 1 | 30 (30%) |
| **3** (ஏறத்தாழ 30 நிமிடங்கள்) | **கேட்டல் கருதறிதல்** | தெரிவுவிடை வினாக்கள் | 10 | **20 (20%)** |

# வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம்

**வாசித்தல் (20 மதிப்பெண்கள்)**

| நிலை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **9-10** | **6-8** | **3-5** | **1-2** |
| **உச்சரிப்பும் சொல்லழுத்தமும்**<br>(10 மதிப்பெண்கள்) | ▪ தெளிவான உச்சரிப்பு<br>▪ தெளிவான சொல்லழுத்தம் | ▪ சில பிழைகளை மட்டும் கொண்ட உச்சரிப்பு<br>▪ பெரும்பாலும் தெளிவான சொல்லழுத்தம் | ▪ எளிதில் அறியக்கூடிய பல பிழைகளைக் கொண்ட உச்சரிப்பு<br>▪ ஓரளவு தெளிவான சொல்லழுத்தம் | ▪ தெளிவில்லாத உச்சரிப்பு<br>▪ தெளிவில்லாத சொல்லழுத்தம் |
| **சரளமும் ஓசைநயமும்**<br>(10 மதிப்பெண்கள்) | ▪ சீரான சரளம்<br>▪ பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ பெரும்பாலும் சீரான சரளம்<br>▪ பெரும்பாலும் பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ ஓரளவு சரளம்<br>▪ ஓரளவு பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ சரளமற்ற வாசிப்பு<br>▪ கிட்டத்தட்ட தனித்தனிச் சொல்லாக வாசித்தல் |

**ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் (30 மதிப்பெண்கள்)**

| நிலை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **13 - 15** | **9 - 12** | **5 - 8** | **1 - 4** |
| **கருத்துரைத்தலும் கருத்து வளர்ச்சியும்** (15 மதிப்பெண்கள்) | ▪ தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகளை விரிவாக எடுத்துரைத்தல்<br>▪ கருத்து வளர்ச்சி தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br>▪ உரையாடலில் தொடர்ச்சியாகப் பங்குபெறுதல் | ▪ தலைப்புக்கு ஏற்ற சில பொருத்தமான கருத்துகளை விளக்கிக் கூறுதல்<br>▪ கருத்து வளர்ச்சி பெரும்பாலும் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br>▪ பெரும்பாலும் உரையாடலில் தொடர்ச்சியாகப் பங்குபெறுதல் | ▪ ஓரளவு தலைப்புக்கு ஏற்ற சில எளிய கருத்துகளைக் கூறுதல்<br>▪ கருத்து வளர்ச்சி ஓரளவு தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br>▪ சில வேளைகளில் மட்டும் உரையாடலில் தொடர்ச்சியாகப் பங்குபெறுதல்; அடிக்கடி தூண்டுதல் தேவைப்படுதல் | ▪ தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைக் கூற மிகவும் சிரமப்படுதல்<br>▪ கருத்து வளர்ச்சி மிகவும் குறைவாக இருத்தல்<br>▪ உரையாடலில் தொடர்ச்சியாகப் பங்குபெற இயலாதிருத்தல்; தொடர்ச்சியாகத் தூண்டுதல் தேவைப்படுதல் |
| **சரளமும் மொழிப் பயன்பாடும்** (15 மதிப்பெண்கள்) | ▪ சரளமாக உரையாடுதல்<br>▪ பொருத்தமான சொல்லாட்சியையும் தொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ ஓரளவு சரளமாக உரையாடுதல்<br>▪ ஓரளவு பொருத்தமான சொல்லாட்சியையும் தொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ தயக்கத்துடன் உரையாடுதல்<br>▪ சிறிது பொருத்தமற்ற சொல்லாட்சியையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ அதிகத் தயக்கத்துடன் உரையாடுதல்<br>▪ பெரும்பாலும் பொருத்தமற்ற சொல்லாட்சியையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் |